## பத்திரிகை வெளியீடு

கொழும்பு, 04 மே மாதம் 2020

Nestlé
Good food, Good life

**கல்வி அமைச்சு மற்றும் நெஸ்லே இணைந்து இலங்கையின் முதல் அதிகாரபூர்வ மின் கற்றல் 'ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியம்' (Poshanayai Suwadiviyai) நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்துகின்றன - Nestlé Healthy Kids**

4.5 மில்லியனுக்கும் அதிகமான இலங்கை பள்ளிக் குழந்தைகள் வீட்டில் இருக்கும் இச்சமயத்தில், புதிய மின் கற்றல் முறைமை விசேடமாக முக்கியத்துவம் பெற்றுள்ளது. இந்த நேரத்தில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து, ஆரோக்கியம், உணவுப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் கற்பிக்க உதவுவதற்காக, கல்வி அமைச்சும் நெஸ்லே நிறுவனமும் ஒன்றிணைந்து நீண்ட காலமாக முன்னெடுத்து வருகின்ற Nestlé Healthy Kids நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மின் கற்றல் வடிவத்தை அறிமுகப்படுத்தியுள்ளன. பொதுவாக அரச பாடசாலைகளில் பாடநெறிக்கு புறம்பான ஒரு விசேட பாடமாக அமைச்சின் கல்வியாளர்களால் கற்பிக்கப்படும் இந்த நிகழ்ச்சித்திட்டம், பள்ளிக் குழந்தைகளிடையே ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது http://tiny.cc/ozucoz மூலமாக முன்னெடுக்கப்படுகின்ற இலங்கையின் முதல் அதிகாரபூர்வ மின் கற்றல் 'ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியம்' (Poshanayai Suwadiviyai) சார்ந்த நிகழ்ச்சித்திட்டமாகும்.

*"Nestlé Healthy Kids நிகழ்ச்சித்திட்டத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவை நாம் நெருங்கும் இத்தருணத்தில் ஆரோக்கியமான ஒரு தலைமுறையை வளர்க்க உதவுவதற்கு கல்வி அமைச்சுடன் இணைந்து பணியாற்றுவதில் பெருமைப்படுகிறோம். முன்னெப்போதையும் விட, நல்ல ஆரோக்கியத்தைப் புரிந்துகொள்வதும் உறுதி செய்வதும் இன்று அவசியமாக உள்ளது. குழந்தைப் பருவம் என்பது வாழ்நாள் முழுவதும் தொடரப்போகும் பழக்கவழக்கங்களுக்கான அத்திவாரம் இடப்படும் பருவமாக உள்ளதுடன், மின் கற்றல் கல்வி முறையே எதிர்காலம் என்பது திண்ணமாகத் தெளிவாகியுள்ள இவ்வேளையில் , கல்வியைத் தொடர்வதற்கான காலத்தின் தேவையும் இதுவாகும். இந்த புதிய யதார்த்தத்தில், இலங்கையின் முதல் அதிகாரபூர்வ மின்-கற்றல் ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கிய நிகழ்ச்சித்திட்டத்தை கல்வி அமைச்சுடன் இணைந்து ஆரம்பித்து வைப்பதில் பெருமிதம் கொள்கிறோம்,"* என்று நெஸ்லே நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஃபேப்ரிஸ் கவாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

மின்-கற்றல் நிகழ்ச்சித்திட்டமானது நவீன, இடைச்செயற்பாடுகள் கொண்ட கற்றல் பாணியைக் கொண்டுள்ளதுடன், இதில் பாடசாலை பாடவிதானத்துக்கு உதவும் வகையில் வடிவமைக்கப்பட்ட உள்ளடக்கம் உள்ளது. இது ஆறு தொகுதிகள் கொண்டது, ஒவ்வொன்றின் முடிவிலும் ஒரு மதிப்பீடு உள்ளதுடன், மேலும் இது மும்மொழிகளிலும் கிடைக்கிறது. 60% இற்கு மேல் மதிப்பெண் பெறுகின்றவர்கள் கல்வி அமைச்சிலிருந்து அதிகாரபூர்வ சான்றிதழைப் பெறுவார்கள்.